DECEMBER 2022 **P/ID 35330/PTL4W**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. ஆராய்ச்சி என்பதற்கு இளம்பூரணர் தருகின்ற விளக்கம் யாது?

2. பயன்பாட்டு ஆய்வு என்றால் என்ன?

3. பகுத்தறி முறை என்பது யாது?

4. பரிசோதனை முறைகுறித்து எழுதுக.

5. பெயரீட்டுக் கோட்பாடு பற்றிப் பகிர்க.

6. கருதுகோள் என்றால் என்ன?

7. ஆணை நெறி குறித்து எழுதுக.

8. பகுத்தறிவு நோக்கு என்பது யாது?

9. ஆவணக் காப்பகத்தின் பணி என்ன?

10. அடிக்குறிப்பு எவ்வாறு எழுதப்படுகிறது?

11. சுருக்கக் குறியீடு என்பது யாது?

12. ஆய்வேட்டின் தலைப்புப் பகுதியில் இடம்பெறுவன யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. ஒப்பீட்டாய்வின் பண்பு யாது?

14. செலுத்து நிலை ஆய்வு எங்ஙனம் இயலும்?

15. ஆய்வாளர் எத்தகைய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்?

16. 'தத்துவம் அனைத்து அறிவையும் தன்னுள் கொண்டது' - விளக்குக.

17. உரையாசிரியர்களைத் திறனாய்வாளர்களாக ஏற்கலாமா?

18. இலக்கியமும் ஓவியமும் இயைந்து செல்லுமாறு எங்ஙனம்?

19. கருதுகோள் எவ்வாறு இயலும்?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. 'ஒன்றை நுட்பமாகத் தெளிந்துணரும் பெருமுயற்சியே ஆய்வு' - விளக்குக.

21. ஆய்வு மொழிநடை எவ்வாறு அமையலாம்? – விளக்குக.

22. ஆய்வேட்டில் திட்டமிட்டு அமைக்கவேண்டியதை வலியுறுத்துக.

23. மனித வாழ்வின் சிறப்பிற்கு ஆய்வுலகம் உதவமுடியுமா? ஆராய்க.

24. தகவல் சேகரிக்கவும் நோக்குத் தேவைக்கும் கணினி உறுதுணையாகுமாற்றை எடுத்துரைக்க.

———————